
# விட்டு விடுதலை காண்



மன்னார் அமுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விடுதலை காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டு விடுதலை காண்

பொதுச் செயலாளர்
மன்னார் தமிழ்ச் சங்கம்
மன்னார் மாவட்டம்.

## மன்னார் அமுதன்

வெளியீடு 51

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
**WRITERS MOTIVATION CENTRE**
இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி,
மட்டக்களப்பு, இலங்கை.
T. P. : 065-2226658, 077-6041503
e-mail: okkunaa@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விடுதலை காண்
கவிதைத் தொகுப்பு
ஆசிரியர் : ஜோசப் அமுதன் டானியல்
(மன்னார் அமுதன்)
உரிமை : ஆசிரியருக்கு
மொழி : தமிழ்
முதல் பதிப்பு : 2009
தட்டச்சு : செல்வி சு.கனகமலர்
அட்டை வடிவமைப்பு : வி. தினேஷ். (பவா போட்டோ)
வெளியீடு மையம் : எழுத்தாளர் ஊக்குவிப்பு
(பிரியா பிரசுரம் - 51)
அச்சுப்பதிப்பு : ஏ.ஜே.
விலை : ரூபா: 150/-

Vittu Viduthalai Kaan
Collection of Poem
Author : Joseph Amuthan Daniel
(Mannar Amuthan)
Copy Right : Author
Language : Tamil
First Edition : 2009
Type Setting : Miss.S.Kanagamalar
Cover Designed by : V. Thinesh (Bawa photo)
Published by : Writers Motivation Centre
(Priya prasuram - 51)
Printers : A.J
Price : Rs.150/-
ISBN: 978-955-8715-56-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mrs. P. Mani... la.
Cultural Officer
Divisional Secretariat
Mannar Town.

## சமர்ப்பணம்:



என்னோடு வாழும்
அம்மாவுக்கும்
என்னுள்ளே வாழும்
அப்பாவுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார்

அமுதனின் கவிதைகளை ஒரே இருப்பில் வாசித்து முடித்துவிட்டேன். அவரின் பெயரைப் போலவே அவரின் கவிதைகளிலும் ஆங்காங்கே "அமுதம்" நிறைந்திருப்பதைச் சுவைக்க முடிந்தது. அமுதன் தன் உணர்வுகளுக்கு எழுத்துக்களால் உருக்கொடுத்து வாசகர் உள்ளங்களில் உலாவவிட்டுள்ளார்.

கலைகளுக்குள் பேரரசி கவிதைக் கலை என்பார்கள். கவிதை வாழ்விலிருந்து மலர்வது. வாழ்விற்கே உரியது. வாழ்விற்காகவே நிலைபெற்றிருப்பது.

தமிழ்க்கவிதை வளர்ச்சி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாறு உடையது. சங்ககாலம் தொடங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை சங்க இலக்கியங்கள், காவியங்கள், நீதி நூல்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள் எனப் பல்வேறு வகை இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் மரபுவழி வந்த கவிதைகளோடு சில புதிய வரவுகளும் தமிழுக்கு கிடைத்துள்ளன. குழந்தைக் கவிதைகள், கவிதை நாடகங்கள், புதுக்கவிதைகள் ஆகியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் இருபதாம் நூற்றாண்டுக்கே உரியவை எனலாம்.

"கவிதை என்பது உணர்ச்சியின் உதிரப் பெருக்கு. தன்னுள் பெருக்கெடுத்த உணர்வுகளைத், தான் நன்றாக அனுபவித்து, அதனை உட்கொண்டு பிரசவிப்பவன் தான் கவிஞன். கவிதை என்பதுஆற்றல் வாய்ந்த உணர்ச்சிகளின் ஒட்டுமொத்தச் சிதறல்கள். சலனமற்ற நெஞ்சின் அமைதியில் உண்டாகும் உணர்ச்சிகளின் கொப்பளிப்புகள்" என்பான் ஆங்கிலக் கவி வோர்ட்ஸ் வொர்த்.

"Poetry is the spontaneous overflow of powerful feelings taking its origin from emotion recollected in tranquility."

-Worldsworth-

எவை, எவை எல்லாம் கவிதை அல்ல என்பதை ப.முத்துக்குமாரசுவாமி அவர்கள் இப்படிக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்: "கவிதை என்பது சுகமான சொற்களின் சொர்க்க வாசல் திறப்பன்று. கவிதை என்பது பசும்புல் தலைகளில் பனிக்குடங்களை முத்தமிட வருகின்ற மோகனக் காற்றன்று. கவிதை என்பது ஆடிப்பெருக்கு வெள்ளத்தில் ஆரோகணித்து வரும் வெண்நுரைப் பூக்களன்று".

"கவிதை என்பது கவிஞனின் நெஞ்சில் விழுந்த அடியில், விளைந்த வீக்கம்."கவிதை என்பது இதயக் கதவுகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுக்கமான கீறல்களின் வழியாக ஒரு கோடிக் கல் தொலைவு வரைக்கும் படர்ந்து பரவும் ஓலம். கவிதை என்பது சாயாத கோபுரங்களின், சரியாத கலசங்கள், சமுதாயப் பிரகடனங்கள்" என்பார் வலம்புரி ஜான்.

கவிஞன் காலத்தின் மனச்சாட்சி. தன்னில் இருந்து தான் முறண்படுகின்ற போது தான் கவிஞன் பிறக்கிறான். தீமைகளைச் சாடிச் சத்தியத்திற்குச் சாட்சியாய் நின்று பேசுபவன் கவிஞன். எனவே தான் இன்றைக்கும் சங்க காலக் காக்கைப் பாடினியார் முதல் கவியரசர் கண்ணதாசன் வரை காலமெல்லாம் நம் நெஞ்சங்களில் நிழலாய் உலா வருகின்றார்கள்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல்
கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்,
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"
என்று பாடுகிறார் மகாகவி பாரதியார்.

"உள்ளத் துள்ளது கவிதை - இன்ப
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை" - எனக் கவிதையின் இயல்பை இயம்புவார் கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதனின் உள்ளத்து உணர்வு கவிதையாக இந்நூலில் உருவெடுத்துள்ளது. அவருடைய ஒரு கவிதையே அதைக் காட்டுன்றது.

"பலருக்குத் தொண்டைக் குழிக்குள்
அடைத்துக் கொண்டவை தான்
எனக்கோ விரல்களின் வழியே
வீழ்கின்றன

இவைகளை
எழுதாத இரவுகள்
இனப்படு கொலைகளைப் போலவே
முடிவின்றி நீள்கின்றன"

இன்றைய சமகால அரசியல், யுத்த சூழ்நிலையில் அரசியலுக்கும் யுத்தத்திற்கும் இடையிலான வித்தியாசம் அதிகமில்லை. "அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம். யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல்" என்பார்கள். இந்நிலையில் தமிழர்களின் தலைவிதி இந்த அரசியலுக்கும் யுத்தத்திற்கும் இடையில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கிறது. இன்று உலகத்தில் 62 நாடுகளில் தமிழ் மக்கள் சிந்திச் சிதறிக் கிடக்கிறார்கள். "தமிழன் இல்லாத நாடும் இல்லை. தமிழனுக்கென்றொரு நாடும் இல்லை" என்று பொதுவாகக் கூறப்படுகின்ற வார்த்தை வலியோடுகூடிய உண்மையாகவே உள்ளது. இந்நிலையில்,

"விதைத்த இனம் முளைத்து வரும்
மீண்டும் உனைச் சிதைத் தழிக்கும்
சாம்பலாக வீழ்ந்தாலும்
பீனிக்சாய் எழுவோமென்று
(சொல்லடி சிவசக்தி)"

என நம்பிக்கை வரிகளை அமுதன் வீசுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக இன்று எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்க ளும் எதிர்கொள்கின்ற உயிராபத்து நிறைந்த சவால்களை அமுதன் இப்படிக் கூறுகின்றார்.

"கைக்குக் கையாலும்
வாய்க்கு வாயாலும்
விடை தரும் பண்டிதர்கள்

ஏனோ எழுத்திற்கு மட்டும்
எழுத்தால் பதில் சொல்வதில்லை"

மரபுக்கவிதையென்றோ புதுக்கவிதையென்றோ சொல்ல முடியாத "அணிசேரா" நிலையில் நின்று அவர் எழுதுவதாகத் தெரிகின்றது. மரபாக இருந்தாலென்ன, புதுமையாக இருந்தாலென்ன, "பாத்திரம்" அல்ல "பண்டம்" தான் முக்கியம் என்ற கொள்கையே இன்று இலக்கிய உலகில் எழுதாத விதியாகிவிட்டது.

கவித்துவ வீச்சும், உணர்ச்சி வெளிப்பாடும், கருத்தாழமும் கொண்ட கவிதைகள் பல இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. வளரும் இளம் கவிஞரான அமுதனுக்கு இந்நூல் ஓர் ஆரம்பம் மட்டுமே. அவர் நிறைய எழுதி, நிறைய வாசித்து, நிறைய விவாதித்து இன்னும் அதிக கனமான, கவித்துவம் நிறைந்த, காலத்தால் அழியாத கவிதைகளைப் பிரசவிக்க வேண்டுமென ஆசிக்கின்றேன், வாழ்த்துகின்றேன்.

நட்பின் நிழலில்
நிறைந்த வாழ்த்துக்களுடன்
அருட்திரு. தமிழ் நேசன் அடிகள்
ஆசிரியர் "மன்னா" பத்திரிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கலைவாதி கலீல்

கவிதைக்கென்று சில வரையறைகளும் வரம்புகளும் உள. யாப்பமைதியுடனும், அணிச்சிறப்புடனும், தளைதட்டாமல் எழுதப்படுவதே கவிதை என்பர். கவிதையில் பிழையிருப்பின் அதனைச் "சங்கப் பலகை" ஏற்றுக்கொள்ளாது.

ஒரு காலத்தில், கடினமான செய்யுள் வடிவில் இருந்த கவிதைகள், பின்னர் படிப்படியாக இலகுபடுத்தப்பட்டது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்ற பா வகைகளைப் படித்துத் தெளிய பகுப்புரை மற்றும் தனி அரும்பத அகராதிகள் தேவைப்பட்டன.

பின்னர் செய்யுள்கள், கவிதை மற்றும் பாடல் வடிவம் பெற்றன. ஆயினும் யாப்பிலக்கணம் சற்றும் பிசகாமல் தளைதட்டாமல் எழுதப்பட்டது, அல்லது பாடப்பட்டது. காலம் செல்லச்செல்லக் கவிதையின் கடினத்தன்மையும் குறைக்கப்பட்டது. ஆயினும், கவிதை இலக்கணத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இலகுவாய் விளங்கிக் கொள்ளத் தக்க சொற்கள் பயன்படுத்தப்பட்டாலும் கவிதையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவம் கெட்டுவிடாமல் பேணிக் காக்கப்பட்டது. அதாவது யாப்பிலக்கணம் முறையாகப் பேணப்பட்டது.

புரட்சிக் கவிஞன் பாரதிக்குப் பின்னர் கவிதை வடிவம் பல்வேறு மாற்றங்களைப் பெற்றது. சொல்லிலும் பொருளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. செய்யுள் வடிவம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கவிதை வடிவமாகிப் பின்னர் அவை வசன கவிதை, நவீன கவிதை, உரைநடைக் கவிதை, புதுக்கவிதை என்று பல்வேறு பரிணாம மாற்றங்கள் பெற்றன.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வலுவில கால வகையினானே" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இம்மாற்றங்கள் தவிர்க்க முடியாத நிகழ்வுகளாயின. இன்றைய நவீன யுகத்தில் அந்நிய கவிதா சாரல்களும் நம் தமிழ் மீது வீச ஆரம்பித்துள்ளன. அவை "ஹைக்கூ" எனப்படும் ஜப்பானியக் குறுங்கவிதை வடிவமும், "லிமறிக்ஸ்" எனப்படும் ஆங்கிலக் "குறும்பா" வடிவமுமாகும்.

எது எவ்வாறு இருப்பினும் யாப்பெனும் சிறைக்கூடத்தில் இருந்து கவிதை விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றாலும் கூட, கவிதை எனப்படுவது "கவித்துவம்" எனும் உயிர்முச்சின் பாற்பட்டதாகும் இல்லாவிடில், அது கவிதை ஆகாது. அத்தோடு "ஓசை" அற்றவையும் கவிதை ஆகாது. அவை வெறும் வசனங்களே! கவிதைக்கு ஓசை மிக அவசியமானதாகும். இது எனது அசைக்க முடியாத கருத்தாகும்.

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது, சோதிமிக்க நவ கவிதை, எந்நாளும் அழியாத மாகவிதை" என்றான் பாரதி. அதனைப் பின்பற்றியே கவிதை இலக்கியம் படைத்து வருகிறார், இளங்கவிஞரான அமுதன்.

அவரது கவிதைகளை நான் படித்துப் பார்த்தேன். சொல் புதிது, சுவை புதிதாக இருப்பதை உணர்கிறேன். இவர் மரபுக் கவிதைகளைத் தவிர்ந்து புதுக்கவிதைகளையே எழுதியிருக்கிறார். இவரது கவிதைகளில் மனிதநேயம், காதல், கழிவிரக்கம், விரக்தி, வேதனை, பந்தபாசம், ஏமாற்றம், எதிர்பார்ப்புகள், கொடுமைகளுக்கு எதிராக கிளர்ந்தெழும் பாங்கு, போராடும் குணம், இன்னோரன்ன உணர்ச்சி பிரவாகங்கள் இழையோடுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்க முடிகிறது. யாப்பிலக்கணத்தை மீறி மரபை உடைத்து இவர் எழுதியிருந்தாலும், இவரது கவிதைகளில் வெறும் வசனப் பாங்கு காணப்படவில்லை என்பது விசேட அம்சமாகும். பெரும்பாலான புதுக்கவிஞர்களின் கவிதைகளில் காணமுடியாத ஓசைநயம், ஓசைச்சுவை இவரது கவிதைகளில் இழையோடுவதையும் அவதானிக்க முடிகிறது.

ஒரு கவிஞனுக்கு ஆகாயத்திற்கு அப்பாலும் ஊடுருவிப் பாய்கின்ற தீட்சண்யப்பார்வை இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். அமுதனின் கவிதையைப் படித்துப் பார்த்த போது தீட்சனப்பார்வை இவரிடம் இருப்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

"விளக்கோடு எரிந்து வீழ
விட்டிலல்ல நாங்கள்
விழுந்த இடம் பொசுக்கிவிடும்
விடிவெள்ளி தமிழனென்று...
சொல்லடி சிவசக்தி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைத்த இனம் முளைத்து வரும்
மீண்டும் உனை சிதைத் தழிக்கும்
சாம்பலாக வீழ்ந்தாலும்...
பீனிக்சாய் எழுவோமென்று...
சொல்லடி சிவசக்தி...”

போன்ற கவிதைகள் மூலம் கவிஞரது உளப்பாங்கையும், உணர்ச்சி வேகத்தையும், கவிதா வீச்சையும், வீரத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது.

வீரத்தையும் விவேகத்தையும் பாடும் கவிஞர் அழகியலையும் அழகாய் பாடுகிறார். காதலும் கனிரசமும், தாய்மைச் சிறப்பும் இவர் கவிதா வரிகளில் நர்த்தனமிடுகின்றன. சில கவிதைகள், நெஞ்சில் மெலிதாய் மயிலிறகு கொண்டு நெருடிய நெகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

“தாய் மடியில் தலைசாய்த்தால்
பசிகூட மறந்துவிடும்
வெண்குரலில் பண்ணிசைத்து
வேந்தனெனைத் துயில வைப்பாள்”
என்று தாயின் சிறப்பைப் பாடும் கவிஞர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோள்களில் சாய்ந்தும்
தலைமுடியைக் கோதியும்
மூக்கோடு மூக்கை உரசியும்
என் உயிரைப் பிழியப்போகின்றாய்"

என்று காதலியின் இனிமையையும் பாடுகிறார்.

"கண்ணிரண்டும் விண்மீன்கள்
காதுமடல் செவ்வானம்
புருவங்கள் பிறைநிலவு
பூத்த பூவாய் செவ்விதழ்கள்"

என்று உவமான, உவமேயங்களை சிறப்பாகக் கையாளும் கலையறிந்த இளங்கவிஞரான அமுதனின் எதிர்காலம் பிரகாசமானது எனத் துணியலாம்.

**கலைவாதி கலீல்**
முன்னாள் உபபீடாதிபதி
உதவி ஆசிரியர் - நவமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மன்னார் அமுதன்

என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்தும் எழுத்திற்கும் உங்களுக்கும் முதல் வணக்கம்.

மிடிமையும் அச்சமும் மேவியென் நெஞ்சில்
குடிமை புகுந்தன, கொன்றவை
போக்கென்று
நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்" என்றான்
மகாகவி பாரதி.

இந்த மகா கவியின் புத்தகத்தை, எனது ஒன்பதாவது அகவையில் பேச்சுப்போட்டி ஒன்றில் தமிழ் நாட்டின் வரைபடத்தில் இடம்பெறாத கிராமத்துப் பள்ளியான "யாதவா இந்து தொடக்கப்பள்ளி"யில் (விருதுநகர் மாவட்டம்) பரிசாகப் பெற்றுக் கொண்டேன். அது தான் நான் ஆரம்பக்கல்வியைப் பயின்ற பள்ளி.

1990-ஆம் ஆண்டில் அருந்தமிழும், செந்நெல்லும் விளையும் மன்னார் மாவட்டத்தின் சின்னக்கடை நகரிலிருந்து இனவாதத்தினால் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்தவர்களில் நானும் ஒருவன். அதன் பின் பல இடம்பெயர்வுகளுக்கு பின் ஆண்டாள் பிறந்த மண்ணான ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கல்வியையும் இளமையையும் வளப்படுத்திக் கொண்டேன். 2004 ஆம் ஆண்டின் ஈற்றில் தாயகம் திரும்பியிருந்தாலும், 2006 ஆம் ஆண்டிலேயே ஒரு வலைப்பதிவாளனாக என்னை அடையாளம் காட்டிக்கொள்ள முடிந்தது. வலைப்பதிவில் வாசகர்களும், நண்பர்களும் கொடுத்த பின்னூட்டத்தின் முன்னோட்ட முயற்சியே "விட்டு விடுதலை காண்".

"சிறு வயதில் குண்டு மழையின் சத்தத்தைக் கேட்கும் போதெல்லாம் ஓடி விடுவோம், வாங்க எல்லோரும் ஓடி விடுவோம் என்று நான் கத்துவேன்", என்று அம்மா அடிக்கடி நினைவுபடுத்துவார். பீரங்கி குண்டுகளின் வீச்சுக்கும் , துவக்குச் சன்னங்களின் சத்தத்திற்கும் பயந்து என் கை, கால்கள் நடுங்கிய போது இறுக்கிப் பிடித்துக் கொண்டது புத்தகப் பையையே.

பத்து வயதிலும் என் மனதை விட்டகலாத பயத்தின் வடுக்கள் உறக்கத்தில் உளறல்களாக வெளிப்பட்ட போதும், மனனம் செய்யாத வார்த்தைகள் பல மனதில் ஓலமாய் ஒலிக்கின்றபோதும், பல நேரங்களில் நானே என்னைக் கண்டு பயந்ததுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உறக்கத்தின் உளறல்கள் எங்கோ மறைந்து கிடக்கும் உள்ளத்தின் குமுறல்கள் என்பதைப் பின் நாட்களில் உணர்ந்து கொண்டேன். ஓரினத்தின்மேல் விழுந்த அடியின் இரணங்களும் கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித் தனமும், என் மனதிலும் வடுக்களைப் பதிந்தே சென்றிருந்தன.

ஆரம்ப கல்விக் காலத்திலேயே அறிவொளி இயக்கத்தில் உறுப்பினராக இருந்ததினால் பல விழிப்புணர்வுக் கருத்துக்களைத் தெருப் பிரச்சாரமாக செய்வதற்கு உதவியாகக் கண்டதையும் வாசித்தேன். அவ்வாசிப்பு பின்னர் சுவாசத்தில் கலந்துஇ எழுதுவதற்கும் என்னைத் தூண்டியது.

2003ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் புலம்பெயர் படைப்பாளிகளுக்கான எழுத்தாளர் பட்டறையை நடாத்தி எம்மை நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த படைப்பாளிகளான ச. தமிழ்ச்செல்வன் (பத்தமடை), கிருஷி (நெல்லை 1), உதய சங்கர் (கோவில்பட்டி 1) போன்றவர்களுடன் நேரடியாகக் கலந்துரையாட வைத்துச் செம்மைப்படுத்திய "ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்திற்கும்" (நெல்லை மண்டலம்) மற்றும் என் கவிதைகளைப் பிரசுரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கப்படுத்திய "மாணவர் விடியலின்" பிரதம ஆசிரியரும், "இயேசு சபை அகதிகள் பணி" (JRS - திண்டுக்கல்) சமூக சேவை அமைப்பின் நிறுவனருமான அருட்பணி.வின்னி ஜோசப் அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன். பெரும் பணிப் பளுவிற்கு மத்தியிலும் நான் கேட்டவுடன் முன்னுரை எழுதிக் கொடுத்தவரான சிறந்த மனிதரும், பழகுவதற்கு இனியவரும், இலக்கியவாதியுமான திரு. கலைவாதி கலீல் அவர்களுக்கும், வாழ்த்துரை எழுதி வாழ்த்திய "மன்னர்" இதழின் ஆசிரியரும், கவிஞரும், அருட்பணியாளருமான Fr. தமிழ்நேசன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னை சிறப்பாக எழுதுவதற்கு ஊக்கம் கொடுத்த மேமன் கவி அவர்களுக்கும், என் மேல் அக்கறை கொண்டுள்ள "திருமறைக் கலா மன்ற" அருட்பணியாளர். சவெரி, அம்புறோஸ் பீட்டர், பிரான்சிஸ் எண்டர்பிறைசஸ் கு. அலோசியஸ், மற்றும் சிறப்பாக பதிப்பித்துத் தரும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய மேலாளர் ஓ.கே.குணநாதன் அவர்களுக்கும், எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அட்டைப்படத்தை அழகுற வடிவமைத்துத் தந்த வி. தினேஷ்க்கும், கவிதைகளை அழகுற கணனி மயப்படுத்தித் தந்த சு.கனகமலர் அவர்களுக்கும், மற்றும் இப்புத்தகம் சிறப்புற வெளிவர உதவியும் ஊக்கமும் தந்த அனைத்து நல்மனங்களுக்கும் எனது மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விதைகளை விதைத்துவிட்டு விருட்சத்தை எதிர்பார்ப்பதைப் போல, கடுகுகளாய்ச் சிதறிக்கிடந்த என் கவிதைகளைத் தொகுத்துவிட்டு உங்களின் மேலான கருத்திற்காகக் காத்திருக்கிறேன்.

முட்களையும் நேசிக்கிறேன்.

உங்கள் சொற்கள் என்னை குத்துவதில்லை"

எனவே குறை நிறைகளை எழுதி என்னை செம்மைப் படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.

பணிவன்புடன்

ஜோ. அமுதன்
# J - 1 / 6, N.H.S,
Maligawatte, Colombo 10.
Mobile: 0714442241
Web: www.amuthan.wordpress.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஓ.கே. குணநாதன் MA MSc, Mphil
மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்

மகிழ்ச்சி... நீண்ட மகிழ்ச்சி.. என்னுள் என்னை அறியாமலேயே எழுகிறது. ஆசையோடு திரும்பிப் பார்க்கிறேன். கரடு முரடான கல்லும் முள்ளும் நிறைந்த ஈழத்து இலக்கியத்தளத்தில் மெள்ள மெள்ள ஆரம்பித்த எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் புத்தக வெளியீட்டில் 50வது தடத்தைத் தாண்டி 51வது வெளியீட்டில் பாதம் பதித்து நிற்கிறது.

புத்தக வெளியீடு என்பது சுமையானது. அதுவும் சுகமான சுமையானது. மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், புலம்பெயர் நாடு எனப் பல்வேறு பிரதேச நூல்களை வெளியிட்ட போதும், இந்நூலானது மன்னார் பிரதேச நூலாக அமைவது மகிழ்ச்சியே. ஈழத்து இலக்கியப்பரப்பில் மன்னார் பிரதேசம் பின்தள்ளப்பட்ட அல்லது புறந்தள்ளப்பட்ட பிரதேசமாகக் கொள்ளலாம்.

இம்மண்ணிலிருந்து பெரிதாக இலக்கியப் படைப்புக்களோ அல்லது இலக்கியப் படைப்பாளிகளோ பிரகாசிக்கவில்லை. அப்பிரதேசத்தில் கூத்துக்கலை வளர்ந்திருந்த அளவிற்கு படைப்பிலக்கியம் வளரவில்லை என்பது கசப்பான உண்மை. மன்னார் பிரதேசத்தின் மூத்த படைப்பாளிகள் என்று கூறும் பொழுது நான் அறிந்த வகையில் நாவண்ணன், கலைவாதி கலீல், பி.பி. அந்தோனிப்பிள்ளை ஆகியோரையே குறிப்பிட முடிகிறது.

அது மட்டுமல்லாமல் வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலம் சென்ற நிலையில் மன்னார் நகர் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்தும் வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா மட்டக்களப்பு ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பல தடவைகள் நடைபெற்றது. ஆனால் ஒருதடவை கூட மன்னாரில் நடாத்தப்படவில்லை என்பது வரலாற்று உண்மை.

அண்மைக் காலமாக மன்னார் பிரதேசத்திலிருந்து துடிப்புள்ள இளைஞர் குழாமொன்று இலக்கிய முயற்சிகளில் முனைப்புடன் செயற்பட ஆரம்பித்திருப்பது கொஞ்சம் ஆறுதல் தருகிறது.

2008ல் எஸ்.ஏ. உதயன் எழுதிய 'லோமியா' நாவல் வெளியிடப்பட்டது. அவர் எழுதிய 'தெம்மாடுகள்' என்ற நாவல் 2009ல் வெளிவரக் காத்திருக்கிறது.

இந்த வேளையில் துடிப்பு மிக்க இளம் எழுத்தாளர் மன்னார் அமுதனின் "விட்டு விடுதலை காண்" கவிதை நூல் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் வெளியீடாக வெளிவருகிறது.

மன்னார் நகரின் சின்னக் கடையைச் சேர்ந்த அமுதன், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தளம் எனப் பல்வேறு தளங்களில் எழுதிய கவிதைகளைத் தொகுத்து நூல் வடிவில் சரமாகத் தந்திருக்கிறார்.

வயதில் சிறியவராக இருந்த போதிலும் போர்க் கால சூழல் இவரை பதப்படுத்தியிருக்கிறது. இந்தியாவில் மதுரையில் வாழ்ந்த அநுபவங்களும் கவிதை எழுதத் தூண்டியிருக்கிறது. அவை கவிதையின் வாயிலாகப் புலப்படுகின்றன.

அமுதன் இன்னும் ஆழமான கவிதை நூல்களைப் படிக்க வேண்டும். இன்னும் பல நூல்களைப் படைக்க வேணடும். வாழ்த்துக்கள். மீண்டும் இன்னுமொரு நூலில் சந்திப்போம்.

பிரியமுடன்
ஓ.கே. குணநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் பரப்பில் சிறகை விரிக்க...

| | |
|---|---|
| தாய் | 27 |
| எந்தை | 29 |
| ஆசான் | 31 |
| தெய்வம் | 32 |
| தோழன் | 33 |
| பிரம்மன் செய்த ஓவியம் | 34 |
| வெயிலும் வாழ்வும் | 35 |
| எனக்கு இல்லையா அவள் | 36 |
| ஏன்? | 38 |
| என் கிராமம் | 39 |
| இயற்கை | 43 |
| நான் + நீ = கவிதை | 44 |
| என் சுகமான சுமைகள் | 46 |
| தேவையில்லை | 47 |
| இது தான் எங்கள் தாகம் | 48 |
| என் தோழி, என் காதலி, என் மனைவி | 49 |
| வெற்றியை நோக்கி | 51 |
| சந்தோசமாய் வா பின்னே | 52 |
| வானமும் வசப்படும், வழுக்கி விடாதே | 53 |
| தமிழச்சியின் புலம்பல் | 55 |
| என் காதலே | 57 |
| நானும் நீயும் | 58 |
| வரதட்சணை | 59 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நெல் | 60 |
| பணமிருந்தால் | 61 |
| மாணவனே! நாளைய நாயகனே! | 62 |
| இழப்பு | 64 |
| விதவை | 65 |
| எங்கிருக்கிறாய்...என்னவளே...? | 66 |
| தொங்கு தோட்டம் | 69 |
| விலைவாசி | 70 |
| ஆசை... ஆசையாய் | 71 |
| பாப்பா பாட்டு | 72 |
| என் தோழி | 73 |
| உதிரும் பூவின், மலர்ந்த ஞாபகம் | 77 |
| கண்மணியே | 80 |
| நான் | 81 |
| மழை | 82 |
| காதல் | 83 |
| காதல்... நட்பு... வாழ்க்கை | 84 |
| விவசாயி பேசுறேங்க | 85 |
| விடுதலைப் பள்ளு | 87 |
| ஏழு நாட்களும்...ஒரு காதலும்... | 89 |
| காதல் காயங்கள் | 91 |
| இரங்கல் கவி -முத்துக்குமரன் | 92 |
| விட்டு விடுதலை காண் கிளியே... | 94 |
| மரணிக்க முன் ஒரு நிமிடம் | 96 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனதருமைத் தாய்

தாய் போல அரவணைக்க
தரணியிலே யாருண்டு?
சேயெனக்கு உணவளிக்க
சேற்றினிலும் நடந்திடுவாள்

தாய் மடியில் தலைசாய்த்தால்
பசிகூட மறந்துவிடும்
வெண்குரலில் பண்ணிசைத்து
வேந்தனெனைத் துயில வைப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப்புகளை எனக்களித்தாள்
இன்சுவையை அவளறியாள்
படிப்புகளை எனக்களித்தாள்
பள்ளியினை அவளறியாள்

தவறு செய்து நான் வருவேன்
தடியெடுத்து அடித்திடுவாள்
தேம்பியழ நினைக்கும் முன்னே
தேனெடுத்துப் பூசிடுவாள்

இனிமையிலும் வறுமையிலும்
இருப்பதையே பகிர்ந்தளித்தாள்
தடைக்கல்லில் இடறுகையில்
படிக்கல்லாய் அவளிருந்தாள்

ஊருறங்கும் வேளையிலே
உணவுகளைச் சமைத்திடுவாள்
உயிருறங்கும் வேளையிலும்
சமைத்தவுடன் உண்ணமாட்டாள்

மிஞ்சியதை உண்டுவிட்டு
மீண்டுமெனை அணைத்திடுவாள்
தாய் போல அரவணைக்க
தரணியிலே வேறுளரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எந்தை

காலடி மணலைக்
கடலலை அரிப்பது போல்
மனதை அரிக்கிறது
மறைந்தவுன் நினைவுகள்

விரல் பிடித்து நடை பழக்கி
வீழ்ந்த போது தூக்கிவிட்டு
பல்கடுக்க விரல் கொடுத்து
கடித்த வலி ரசித்திருப்பாய்

நாடுவிட்டு நாடுசென்றும் - நன்
மக்கள் எமைப் படிக்க வைத்தீர்
வறுமையெனும் சொல் அறியா
புலமையொடு வளர்த்தெடுத்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக், குட்டிக் கதைகள் சொல்வீர்
குறைநிறைகள் கேட்டறிந்தீர்
அறநெறிகள் எடுத்துரைத்து
அன்பான தந்தையானீர்

விந்தை தரும் செய்திகளை
விதந்துரைத்தீர் படிப்பதற்கு
படித்தவற்றை எழுதுகையில்
படிப்பதற்கு நீரிலையே


சதுரங்க விளையாட்டில்
சளைக்காத வீரன் நீர்
விளையாட்டுத் தந்திரத்தை
விளையாட்டாய்க் கற்பித்தீர்

நல்வழியும் மூதுரையும்
நயமாகக் கற்றவர் நீர்
நல்லபல கருத்துரைத்து
நல்வழியில் வாழ வைத்தீர்

பல்மொழிப் புலமையோடும்
பகட்டின்றி வாழ்ந்த நீவீர்
விண்ணகத்தில் இறைவனவன்
வலப்பக்கத்தில் வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசான்

வீட்டுக் குருவியாய் வாழ்ந்த எனக்கு
ஏட்டுக் கல்வியைத் தந்தவர்கள்
பாட்டுப் புலமையை நன்கறிந்து
பாடல் பயிற்சியால் நிறைத்தவர்கள்

ஏற்றிவிட்ட என் ஏணிகளே - உம்மை
எண்ணியெண்ணியே மனம் மகிழ்வேன்
என்னைத் தாக்கியழித்திட வெள்ளம் வருகையில்
தூக்கி அணைத்திட்ட தோணிகள் நீர்

கல்விப்பயிர் நிலம் வறண்ட காலத்தில் - என்
கண்ணீர் மழைதனை உரமாக்கினீர்
கசந்த காலங்கள் பசுமையாய் இப்போது
வசந்த காலமாய் மலர்கிறதே

தமிழையே உயிராக வரம்பெற்ற ஐயா
தமிழனாய் என்னை நீர் வளர்தெடுத்தீர்
இலக்கணம் இலக்கியம் பயிற்றுவித்த - ஒரு
தலைக்கனம் இல்லாப் பண்டிதர் நீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வம்

உலகிற்கெல்லாம் ஒருவனவன்
இணை வைக்க முடியா இணையற்றவன்
வலிமையைக் கொடுக்கும் தலைவனவன்
வல்லமை மிக்க இறைவனவன்

கொடியோர் ஆட்சியை முடித்திடுவான்
கொலைஞர்கள் வாழ்க்கையை நீட்டி வைப்பான்
மறுமையில் புண்ணியக் கணக்கினைக் கேட்டு
நரகத்தில் அவர்களை எரித்திடுவான்

மறையுரை சொல்வதைக் கேட்டறிவோம்
மற்ற மதங்கள் உரைப்பதை மதித்து நிற்போம்
மனிதன் மனிதனாய் வாழ்வதற்காகவே
மதங்கள் தோன்றின என்றறிவோம்

வல்லோன் இறைவனை வணங்கிடுவோம்
வாழ்த்துப் பாக்கள் பாடிடுவோம்
வணங்கா முடிகளின் வாழ்க்கைப் பாதையும்
வல்லவன் வகுத்ததே என்றுணர்வோம்

வல்லமைமிக்க இறைவா போற்றி
வலிமையைக் கொடுக்கும் தலைவா போற்றி
அமைதியை அருளும் ஆண்டவா போற்றி
வேந்தர்கெல்லாம் வேந்தனே போற்றி, போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தோழன்

வெட்ட வெளி தனிலே - மனம்
வெதும்பி அழுது நின்றேன்
தொட்ட ணைத்து என்னைத் - தோழன்
தேற்றி அணைத்துக் கொண்டான்

பட்ட மரத்தில் இடி
பாய்ந்து விழுந்தது போல்
சுட்ட சொல் கொண்டு - எனைச்
சுற்றம் தூற்றுகையில் (வெட்டவெளி)

நீச உறவுகளில் - நான்
பாசம் வைக்கவில்லை - மாறு
வேசம் கட்டிக் கொண்டு - அவர்போல்
வாழத் தெரியாததால் (பட்ட மரத்தில்)

அட்டை மனிதர்கள் என்
இரத்தம் குடிக்கையிலே - உடல்
வெட்டப் படுவதைப் போல்
வலி கொன்று தின்னுவதால் (நீச உறவுகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மன் செய்த ஓவியம்



வெண்ணிலவைக் கல்லாக்கி
விண்முகிலை உளியாக்கி
பன்முகத்தான் பிரம்மனவன்
படைத்த எழில் சிற்பமவள்



கண்ணிரண்டும் விண்மீன்கள்
காதுமடல் செவ்வானம்
புருவங்கள் பிறைநிலவு
பூத்த பூவாய்ச் செவ்விதழ்கள்

கருங்கூந்தல் மையிருட்டு
இருகொங்கம் மலைமுகடு
தரையதிரா அன்னநடை - தவறி
விழத்துடிக்கும் சின்ன இடை

கடையிரவில் புல்நுனியின்
கரம் சேர்ந்த வெண்பனி போல்
இடையிடையே இலை மறைத்த
காயாக தொப்புள் ஒன்று

ஈரைந்து பத்து விரல்
இட்டு வைத்த பூக்கோலம்
புள்ளியிலே நான்சிக்கி
பூண்டது தான் கவிக்கோலம்.

மன்னார் அமுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெயிலும், வாழ்வும்



உயிரைப் பிளந்தது
உக்கிர வெயில்
உழைத்துக்களைத்தான்
உழவன்

தலையில் சுமையுடன்
தரையதிராமல்
வயலை வந்தடைந்தாள்
உழத்தி

கஞ்சிதான், இருந்தாலும்
கவலையின்றி ருசித்தான்
(இ)ரஞ்சிதமே அவனருகில்
இருப்பதைப் போல் ரசித்தான்

மஞ்சமில்லை அவனிடத்தில்
மண்தரையே சொர்க்கம்
பெண்மனமே வீழ்ந்த பின்பு
அவனுக்கென்ன வெட்கம்

பஞ்சமில்லை அவனுக்குப்
பசித்ததுமே உணவு
பாட்டன்இ பூட்டன் நமக்குத் தந்த
சொத்துத் தாங்க உழவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு இல்லையா, அவள்



எதற்காக இறைவா ?
எனக்கான வரங்களை மட்டும்
தர மறுக்கிறாய்.

அவளைப் பற்றிய
கசப்பான எண்ணங்களை, என்
கவிதைக்கு கருவாக்கி விடாதே

நான்கு நாட்களுக்குள்ளா என்கிறாளே
பேசிய நான்காவது நிமிடத்திலேயே
காதல் பெருவெடிப்பு

என் இதயத்தை பிளந்து
நரம்புகளில் நாணேற்றியதை,
நீ அறிவாய் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அழைக்க மறந்த நாட்களில்
நான் மட்டுமல்ல
என் அலை பேசியும்
உயிர் வாழவில்லை


அவளுடன் பேசிய நாட்களை
பழகிய நாட்களை
மறக்கச் சொல்கிறாளே

வறட்சியில் உதிர்த்து
வசந்தத்தில் பூக்க
நான் என்ன மரமா ?

எதற்காக இறைவா ?
எனக்கான வரங்களை மட்டும்
தர மறுக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏன்?

உன்னைப் பார்ப்பதில் உள்ள
சுகத்தை விட
பார்க்காததால் உண்டான வலி
சுகமாய் இருக்கிறதே - ஏன்?

மன்னார் அமுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் கிராமம்

இதோ,
என் கிராமம்
உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளும்
பாதுகாப்பின்றி

விரட்டியடிக்கப் பட்ட நாங்கள்
இன்றும் கிராமத்திற்குள்
விருந்தாளிகளாகவே பிரவேசிக்கிறோம்

சாலையோரம் நடப்பட்ட
மரங்களைப் போல்
மைல்கற்களுக்குப் பதிலாக
ஊன்றப்பட்ட மனிதர்கள்

இரும்புத் தொப்பிகளுக்குள்
முகத்தை மறைத்தபடி
கறுப்புத் துவக்குகளோடும்
பச்சை உடைகளோடும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் கால்களின்
வழியே தான்
என் கிராமத்தில்
ஜனநாயகம் நடைபோடுகிறது

ஆங்காங்கே பெருவெடிப்புகளோடும்
கார்கில் வீரனைப் போல்
நெஞ்சை நிமிர்த்தி நிற்கும்
செல்லடி பட்ட வீடுகள்

அம்மா வைத்த
தென்னம் பிள்ளைகள்
பீரங்கிகளுக்கு முட்டுக்
கொடுக்கப்பட்ட வண்ணமாய்

வயல் வெளிகள் மட்டும்
செயற்கைப் பசுமையோடு
பச்சைக் கூடாரங்களின்
ஆக்கிரமிப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உருண்டு விளையாடிய மண்
பதுங்கு குழிகளுக்குள்
அடுக்கப்பட்ட மூட்டைகளாக

அதோ...
நான் வளர்த்த நாயின்
கடைசிச் சந்ததிகள்
அதே முகச் சாயலோடு
பச்சையுடைகளுக்கு வாலாட்டிக்கொண்டு
என்னைப் பார்த்துக் குரைக்கின்றன

அடிக்கத் தோன்றாமல் - நான்
வீசிய ரொட்டித் துண்டுகளைத்
தின்றுவிட்டு
எனக்கும் வாலாட்டுகிறது
சர்வதேசத்தைப் போல்

சிதறிய எலும்புகளாய்
கண்ணி வெடிகளில் சிக்கிய
கால்நடைகள்

வெறும் இறகுகளாய்க்
காற்றில் பறந்து திரியும்..
என் வீட்டுச் சண்டைக் கோழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் வீழ்ந்த இடங்கள்
இன்னும் மூடப்படாத, பள்ளமாய்
தமிழனின் காய்ந்து போன இரத்தம்
இன்றும் கழுவப்படாமல்
பச்சையுடைகளின் ஆக்கிரமிப்பைப்
பறைசாற்றுகின்றன

தலையில்லா முண்டங்களான
பனைமரங்களை
மோதிவரும் காற்று
"போய்விடு"இ"போய்விடு"இ
என்றதும் போகிறேன்

சோதனை என்ற பெயரில்
கிராமத்துப் புழுதியும் தட்டிவிடப்பட
விடைபெறுகிறேன்
பச்சைக் கூடாரங்களின் ஊடாக

இதோ,
என் கிராமம்...
உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளும்
பாதுகாப்பின்றி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை



பொங்கும் நதியும்
வங்கக் கடலும்
சங்கம் தழுவிய
தமிழும் இயற்கை

மயங்கும் மாலையும்
மயக்கும் தென்றலும்
மனையொடு வளரும்
செடிகொடியும் இயற்கை

காரிருள் மேகமும்
கண்சிமிட்டும் விண்மீனும்
கண்ணுக்கு விருந்தாகும்
சிற்றோடையும் இயற்கை

மண்ணுக்கு மழையும்
மரத்திற்கு இலையும்
பெண்ணுக்கு அழகூட்டும்
புன்னகையும் இயற்கை

பண்ணுக்கு இசையும்
விண்ணுக்கு ஒளியும்
மனக்கூட்டில் மலரும்
கவிகளும் இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் + நீ = கவிதை

எதேச்சையாய்
நீ பார்த்தாய்
ஏதோ இச்சையில்
நானும் பார்த்தேன்

எது காதல் என்ற தேடலில்
என்னையே தொலைத்து விட்டு
மனதிலிருந்தவுனைத் தேடி எங்கெங்கோ
அலைந்த நாட்களில் தான் -(எதேச்சையாய்)

குறைப்பிரசவமான சில
கருக்களை சுமந்து கொண்டு - அவை
உயிர் மூச்சிற்காய்
திணறிய வலியில்
தாய்மையை உணர்ந்த
நாட்களில் தான் - (எதேச்சையாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் பெயர் தெரியா
என் கருக்களுக்கு
முன்னெழுத்திட நான்
முனைந்த நாட்களில் தான் -(எதேச்சையாய்)


நம் இச்சையில்
எனக்கும், உனக்கும்
இடைப்பட்ட இரவுகளில்
கனவுகளில் கரம் கோர்த்து

கண்களினால் ஸ்பரிசப்பட்டு
மனப்பையில் கருக்கொண்டு
எழுத்துருக்களால்
முழுப்பெற்றவை தானே
நம் கருக்கள்

உன் கன்னக் குழிகளைக் கூட
காவியமாக்கிய நம் கருக்களை
புறந்தள்ளி நீ போனபோதும்
காதலுடன்
உன் மூச்சுக்காற்றையே
சுவாசித்து வளர்கின்றன... விருட்சமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் சுகமான சுமைகள்

என்

சுவாசமும் சுமைதானடி - நீ

சுவாசிக்க மறுத்துவிட்டால்

இதயமும் சுமைதானடி - உன்

இமை விரிய மறந்து விட்டால்

பாவையுனைப் பார்க்காவிட்டால் - என்

பார்வையும் சுமை தானே

விருந்துச் சுவையும் சுமையே - உன்


இதழ் ருசிக்க மறுத்துவிட்டால்

சுகமாய் தாங்கிக் கொள்வேன்

சுமைதாங்கி தானே நானுனக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவையேயில்லை

பணம் கொடுக்காத - கணவன்
பாசம் காட்டாத - தாய்
கஷ்டம் தெரியாத - மகன்
சோகம் புரியாத - காதலி
சொந்தக் கதை கூறும் - ஆசிரியர்
வார்த்தை தவறிய - நண்பன்
வஞ்சகம் கொண்ட - உறவினர்
தேவையேயில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது தான் எங்கள் தாகம்

இரத்தப் பூக்கள்
நித்தம் பூக்கும் - தேசத்தில்

சித்தம் கலங்கும் - வெடிச்
சத்தம் கேட்கும், நேரத்தில்

வட்ட நிலா
மட்டும் உறவாடுது, வானத்தில்

என்று விடியுமெம் தேசம் - இதுவே
உலகத் தமிழனின் தாகம்.

மன்னார் அமுதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தோழி,
# என் காதலி, என் மனைவி



சட்டத்தைப் போலவே
நானும்
இருட்டாகத் தான் உள்ளேன்
இருண்ட உன் நினைவுகளோடு

தவறான கருத்தையே
கண்ணில் கட்டிக்கொண்டு
உன் காதல் தராசில்
எடை போட்டால்
குறைவாகத் தானே இருப்பேன்
உன்நினைவுகளில்

சாலையோரப் பூக்கள் தான்
எத்தனை பாக்கியம்
செய்தவை?
நிலைக்குத்திய உன் பார்வை
நிர்ணயிக்கப் படுவது
அவற்றின் மேல் தானே

இப்போதெல்லாம்
உன் பார்வைக்கு - நான்
தீண்டத் தகாதவனாகி
விட்டேனே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ அனுப்பிய கடிதத்தில்
குத்தப்பட்ட முத்திரையால்
சிதைந்தவை
உன் எழுத்துக்கள் மட்டுமல்ல
என் இதயமும் தான்

உன் நினைவுகளோடு
கரைந்து கொண்டிருப்பது
நான் மட்டுமல்ல
என் பேனாவும் தான்

காலம் கடந்த பின்
காதல் பிறந்தால்
என்னை வேறெங்கும்
தேடி விடாதே

உன் மன மூட்டையின்,
எங்கேனும் சிறு
இருட்டு மூலையில்
ஒடுங்கிப் படுத்திருக்கும்
என் நினைவுகள்
உன்னைச் சுமந்துகொண்டு

அப்பொழுதும்...
நான் நத்தையைப் போலவே
உன் நினைவுகளை - என்
மனக்கூட்டினில் சுமந்து
கொண்டிருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றியை நோக்கி...

வாழ்க்கை விளையாட்டில்
காலத்தின் கால்களில் சிக்கிய
கால்பந்து நான்.
தடைகளை மீறி
வெற்றியை நோக்கித்
தொடரும் என் பயணம்
தன்னம்பிக்கையோடு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தோசமாய் வா பின்னே

விண்ணை வளைத்துக் கூரையாக்கி
விடிவெள்ளிகளை வேலியாக்கி
கண்மணி உனக்கு வீடு செய்வேன்
கண்ணயராமல் காவல் செய்வேன்

வெண்பனி தீண்ட விடமாட்டேன் - உன்
விருப்பமில்லாமல் தொட மாட்டேன்
சத்தியம் செய்து தருகின்றேன்
சந்தோசமாய் வா பின்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானமும் வசப்படும், வழுக்கி விடாதே

கண்கள் விழித்து
உலகைப் பார்
உன்னை வெல்ல
உலகில் யார்?

விண்ணும் மண்ணும்
மறைத்தாலும்
விடியல் என்றும்
உன்னுடன் தான்

உறவும் உயிரும் நிலைக்காது
உயர்வில்லையேல் நெருங்காது
நிழலும் வெளிச்சம் உள்ளவரை
இருளில் எதுவும் தெரிவதில்லை

பிறகேன்
இன்னும் நித்திரை?
இந்தப் பிணங்களுக்கு மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் எழும் போது
எழுச்சி முழக்கமிடும் சேவல்கள்
எங்கு சென்றன?
விழும் போது...

எழும் போது
அரவணைத்த ஆயிரம் கைகள்
எங்கு சென்றன?
நீ விழும் போது

நிராதரவாய் நிற்கையிலே
சமூகம் எட்டி மிதிக்கும்
முகத்தில் காறி உமிழும்

தயங்காதே
செல்,
முன்னோக்கிச் சென்று கொண்டேயிரு,
வெளிச்சம் கை கொடுக்கும்,
விழுந்து விடாதே,
உலகம் கைதட்டும்
உனக்கே தலைசுற்றும்

வானமும் வசப்படும்
வழுக்கி விடாதே
வானம் உன் எல்லையல்ல
அதையும் தாண்டி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழச்சியின் புலம்பல்

மனித உரிமைகள்
மறுக்கப்பட்ட மண்ணில்
பெண்ணுரிமை பேசப்படும் அவலம்

வெட்டப்படும் ஆட்டுக்கும் தான்
எத்தனை கௌரவிப்பு

மந்தப்-புத்தி ஜீவிகளால்
மறைக்கப்பட்ட கலாச்சாரம்
மறுக்கப்பட்ட மண் உரிமை

தொண்டைக்குள்
துவக்கைப் புதைத்து
நசுக்கப்படும் ஊடக சுதந்திரம்

கைகள் கட்டி
சுடப்பட்ட கணவன்

பணயப் பணம் இன்றி
இருட்டறை வாசத்தில் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்குப் போன மகள்
சந்தியிலே சவமாக,
கடத்தப்பட்ட மகன்
பூசாவில் பிணமான

கதையெல்லாம் கேட்டுக்
கேட்டே செத்தவர்கள்
தலைவர்கள் மட்டுமல்ல
தமிழர்களும் தான்

தட்டும் போதே திறந்து விடு
எம் சுதந்திரக் கதவுகளை - இன்றேல்
கதவுகளை உடைத்தெறிவோம்

கேட்கும் போதே கொடுத்து விடு
எம் உரிமைகளை - இன்றேல்
செவிகளைச் செவிடாக்குவோம்

மறுக்கப்பட்ட உரிமைகளை
பறித்தெடுப்போம்
சுயத்தோடு வாழ
உரிமை தர மறுப்போரை
இம்மண்ணுக்கே பலிகொடுப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் காதலே...

உன்னைக்
காணாமல் கண் துடிக்கும்...
கண்டதும் சொல் தவிக்கும்...
தவித்ததும் நெஞ்சோடு அணைக்கும்...
அணைத்த பிறகும் எரியும் - காதல்
சுகமானது..

மன்னார் அமுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நானும், நீயும்

நான் என்பது
ஆணுமல்ல
நீ என்பது
பெண்ணுமல்ல
நாம் என்பது
நீயோ, நானோ அல்ல
காலம் விட்டுச் சென்ற
காலடிச் சுவடுகளே

மன்னார் அமுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வரதட்சணை

துட்டுக்கும், பட்டுக்கும்
ஆசைப்பட்டு
அடிமாடாய் விலைபோற
மாப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெல்

நீரோடும் நிலத்தோடும்
உறவாடிப்,
பயிராகிப் பின்
பறவைக்கும் பாவைக்கும்
உணவாகிச்,
சருகாகிக்,
கறவைக்கும், காளைக்கும்
விருந்தாகும் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணமிருந்தால்...

சாதி, சனம் கூடி வரும்
சன்மார்க்கமும் தேடி வரும்
ஓடிப்போன சந்தோசமும்
ஆடிப்பாடி வீடு வரும்

வீடு மேல மாடி கட்டி
கோடி மேல கோடி சேர்த்து
வானம் பாடி போல இன்பக்
கானம் பாடியே நாம் வாழலாம்

தீய நண்பர் அகற்றி - நமது
திறமைகளை வளர்த்துக் கொண்டால்
தேடி வந்து புகழும் நம்மைச் சேருமே
தேவையற்ற கவலை நீங்கிப் போகுமே

கள்ள நோட்டு அடிக்காம
கறுப்புப் பணத்த மறைக்காம
ஏழைக்கெல்லாம் தானம் பண்ணி வாழலாம்
இல்லை என்ற சொல்லை வாழ்வில் நீக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவனே! நாளைய நாயகனே!

மாணவனே!
மன்றங்கள் ஆளும் நாயகனே!
வித்தில் மறைந்திருக்கும்
விருட்சம் போன்றவனே!

எரிபொருள் நிரம்பிய ஏவுகணையே
ஏவுதளம் இன்றியே புகைகின்றாய்
பட்டை தீட்டா வைரம் நீ
படிப்பைத் தொடர்ந்து படி படி

சாதீய உணர்வினை உதறிவிடு
சமத்துவ உள்ளத்தைச் சிதறவிடு
மோதிய தடைகளைத் தகர்த்தெறி – நீ
சரியெது? பிழையெது? பகுத்தறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதாபிமானத்தை மறந்துவிடு
மனிதாபிமானத்தைப் பகிர்ந்துவிடு
சினத்தாலே சிறுமை அடையாதே-குணத்தாலே
சிறியோரை வணங்கி மதியாதே

சபைகள் அறியட்டும் உன் புலமை
சரித்திரம் பேசட்டும் பெருமைகளை
தோல்விகள் கண்டு நீ துவளாதே
துவண்டால் துயரங்கள் விலகாதே

வித்தில் மறைந்திருக்கும்
விருட்சம் போன்றவனே
வீறுநடை போட்டு நீ எழுந்து வந்தால்
விடியலும் உனக்காய்க் காத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இழப்பு

வீடுவாசலை இழந்தோம்
அம்மா அழுதார்
அண்ணனை இழந்த போது
அப்பாவும் அழுதார்
அன்றெல்லாம் அழாத நான்இன்றுதான்
அழுகின்றேன்
என்னையே தொலைத்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விதவை

தூண்டிவிட ஆளின்றி
அணையத் துடிக்கும்
அகல்விளக்கு
விதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கிருக்கிறாய்... என்னவளே...?

யாரர் நீ?

எப்படி இருப்பாய்?

ஒல்லிக்குச்சியா?

பூசணிக்காயா?

பனைமரமா?

குள்ளக் கத்தரிக்காயா?

ஆனால்

நிச்சயமாகக்

கேள்விக்குறிகளின்

நிரந்தரப் பதிலாய்,

பெண்ணாய்,

பெண்ணியத்தோடு,

தோள்களில் சாய்ந்தும்

தலைமுடியைக் கோதியும்

மூக்கோடு மூக்கை உரசியும்

என் உயிரைப் பிழியப்போகின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையை,

அழுகையை,

அன்பை,

ஆண்மையை,

முழமையாய் ஆக்கிரமிக்கப் போகின்றாய்

நம் சிசுவை

வயிற்றிலும்

உன் நினைவுகளை

என் இதயத்திலும்

பாரமின்றி நிரப்பப் போகின்றாய்.

நினைக்க, நினைக்க

இனித்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டிக்குள் நீந்தும்
மீனைப் போல்

உன்னையே சுற்றும் என்
கற்பனைத் தாளில்

ஏனோ நீ மட்டும்
விவரிக்கப்படாத விபரமாய்
நானோ கிறுக்கப்படாத
வெற்றுக் காகிதமாய்

முகம் தெரியாத உனக்காக
முகவரி இடப்படாத
வாழ்த்து அட்டைகள்...
பரிசுப் பொருட்கள்...
கூடவே நானும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொங்கு தோட்டம்

பாபிலோனியாவில் மட்டுமல்ல
என்னவளின் கூந்தலிலும்
தொங்கு தோட்டம்
மல்லிகைச் சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைவாசி



விலைவாசி ஏற்றத்தால்
வீதியிலே மக்கள்
கலையிழந்த முகங்களிலே
கவலையான சொற்கள்

கலையுயர்ந்த நம்நாட்டில்-கள்வரைக்
களையெடுத்தால் போதும்
காளைகள் படை திரண்டால்
இந்நிலை மாறும்...

கூன்விழுந்த ஏழைகளின்
குறுக்கில் கூட்டிக் கணக்கெழுதும்
பாவிகளை, சுபபோகிகளைக்
களையெடுத்தால் போதும்...

நீதி வழுவிய இந்நாடு
நிதியிலும் வழுவி விட்டதாம்
அடுக்கடுக்காய் வரிபோட்டால்
கொடுக்கவா முடியும்?
அரசிடமே வழக்கு நாம்
தொடுக்கவா முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசை...ஆசையாய்

உயிரோடு உயிராகி
உறவாட ஆசை
கண்ணோடு மணியாகி
கலந்துவிட ஆசை
கொஞ்சும் உதட்டோடு
குலாவிவிட ஆசை
கண்மணியே உனையணைத்துக்
கண்ணயர ஆசை

முகிலினுள் நிலவாகி
மறைந்துவிட ஆசை
முழுமுச்சும் உன்மூச்சாய்
மாறிவிட ஆசை
கன்னம் நடுவில்விழும்
குழியாக ஆசை
உன் புன்னகையில் மலர்ந்துவிடும்
பூவாக ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாப்பா பாட்டு

எட்டப்பறக்கும் சிட்டுக்குருவியே
கிட்டப்பறந்து வா... - என்
சுட்டித்தம்பிக்கு கதையொன்று சொல்லிட்டு
பட்டெனப் பறந்து போ...

கருத்தொன்று சொல்வேன், பாப்பா நீயும்
கவனமாய்க் கேட்டுக்கொள்
கேட்டதைத் தம்பிக்கு அடிக்கடி சொல்லி
மீட்டிப்பார்த்துக்கொள்

உயர உயரப் பறப்பதினாலே
பலனொன்றும் கிடையாது – நீ
உயந்து நிற்கையில்
உதவவில்லையென்றால்
உயர்வென்றும் நிலைக்காது

உயரப் பறக்கும் பருந்தின் கண்ணில்
படுவது மாமிசமே, அதுவும் அழுகிய
மாமிசமே
நாமோ அளவாய்ப் பறந்து, இயற்கையை
ரசித்து இன்பமாய் வாழ்கின்றோம்

காட்டையழித்து, வீட்டையமைத்து
இயற்கையை வதைக்காதீர்...
சிறுசிறு உயிர்களைப் பிடித்து
விளையாட்டாக இம்சித்து மகிழாதீர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தோழி



என் நினைவுகளில் இன்னும் - நீ
மறக்கடிக்கப்படாத கவிதையாய்

வண்ண, வண்ண உடைகளில்லை
பெரிதாக ஒப்பனையும் இல்லை
எனினும் எது என்னை
நிலை குலையச் செய்கிறது

முக்காடினால் மூடப்பட்ட
முழு நிலவா

அடிக்கடி பார்வையைப் பறிக்கும்
"முத்துப்பல்" சிரிப்பா

பார்த்தால் பார்க்கட்டும் என்று
எட்டிப் பார்க்கும் - பிஞ்சுப்
பத்து விரல்களா

கறுப்பும் அழகு தான் என
உன் உடை பார்த்து அறிந்ததாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தி விடுமோ என நான்
துடிக்கும் போதெல்லாம்
லாவகமாய் நீ சொருகிக்கொள்ளும்
தோள்பட்டைக் குண்டுசியா

எதை நான் ரசித்தேன்
எதில் நான் எனையே மறந்தேன்

அன்று உனைக் கண்ட போது
"எனக்குள் சில மாற்றங்கள்" என்றேன்
"கொஞ்ச நாட்களுக்குள்ளா என்றாய்"
கண்சிமிட்டி

என்னவென்று சொல்லுவேன்
என்னுடன் பேசிய நாள் முதல் தான்
உனக்கு நான் அறிமுகம் - ஆனால்
உன்னைப் பார்த்த நாள் முதலே
எனக்கு நீ அறிமுகமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ வரும் வரை
மூளையில் பதியாமல்
முரண்டு பிடிக்கும் பாடங்கள்
ஏன் இந்தக் காத்திருப்பு?

உன்னைக் காணாத நேரத்தில்
பொம்மையைப் பறி கொடுத்த
சிறுவனைப் போல
ஏன் இந்தப் பரிதவிப்பு?

எப்பொழுதும் இல்லாமல்
இப்பொழுது மட்டும்
கையெழுத்தில் தனிக்கவனம்
என் இந்தக் கவனயீர்ப்பு ?

காய்ச்சலா, தலைவலியா என்று
தெரியாமலேயே
வயிற்றுக்குள் ஒரு பிசைவு
ஏன் இந்த "உடலியல்" மாற்றம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையசைத்து நீ போகும் போதெல்லாம்
தொலைபேசி எண் கேட்க நினைத்து
தொண்டைக்குள் ஏதோ அடைக்க
வெறுமையாய் தலையாட்டுகிறேனே
ஏன் இந்த இயலாமை ?

மார்க்கத்தின் வழியில் நீ
மறையுரையின் வழியில் நான்
நெறிப்படுத்தும் மதங்களா
நமக்கும் சுவராக
ஏன் இந்த முரண்பாடு ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதிரும் பூவின், மலர்ந்த ஞாபகம்

அஞ்சு வயசுல அமச்சிக் கரையில
அம்சவள்ளி கூட அரை நிஜாரோடு
ஆத்தங்கரையில ஒரு கூத்து

பத்து வயசுல பாறையில
பள்ளந்தோண்டி, பக்கத்துவீட்டுப்
பத்மாவோட ஓர் ஆட்டம்
ஆமாம், பாண்டி ஆட்டம்

மணலைக் கயிறாக்கி,
வானத்தை வில்லாக்கும் பருவமது
பருவக்கிளர்ச்சியினால் - அவளின்
எழுச்சியினால்
மூவைந்தில் முகத்தில்
ஒட்டிக்கொண்டவை... பருக்கள்

ஓடும் பாம்பைக் குறுக்கில் மிதிக்கும்
பயமறியா வயது: இருபது
புதியதாய் முளைத்தவள் முத்தம்மாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முவைந்தே கொண்ட
முத்தம்மாள் - என்னை
முத்தத்தால் நனைத்தாள்
இல்லாத என் மூளையைக்
குலைத்தாள்

விவேகமற்ற வீரத்தில்
வாழ்க்கை கொடுத்தேன் -
அன்றே
வாழ்வைத் தொலைத்தேன்
ஈருடல் ஓருயிர் ஆனது -
புதியதாய்ச்
சில உயிர் கருவானது

ஐந்தாறு வருடத்தில்
அவனைக் கண்டாள்
ஆசை கொண்டாள்,
அறிவை இழந்தாள்

அவளின் மோகத் தீயினில்
நான் விட்டிலாகினேன்
இல்லாத எதையோ தேடி
இருக்குமெனை அன்றே
மறந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் பலவாயின
முதுமையும் தேடி வந்தது
இளமையில் கல்வி இல்லாமையால்
முதுமையில் வறுமை என்றுணர்ந்து


கல்லுடைத்துப் படிக்க வைத்தேன்
என் செல்வங்களை
கண்ணிமைக்குள் பொத்தி வளர்த்தேன்
முத்துக்களை
அவர்களும் ஆளாயினர் - அறிவற்ற
என்னை ஆளவுமாயினர்

என் குடிசை மாளிகையானது
மாளிகையருகிலொரு குடிசை
உருவானது – என் செல்வங்கள்
எனக்களித்த மாளிகை: அவர்கள் வீட்டு
எருமைகள் மடம், எவருமில்லை என்னருகில்

ஒருக்களித்துப் படுத்துக்கொள்கிறேன்
கண்ணில் நீர்பெருக,
உதிரும் பூ அழுகிறது,
மலரும் பூக்கள் மீண்டும்...
அமச்சிக்கரையில்
ஆடவதைக் கண்டு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்மணியே

கண்ணிமை விரித்து
காரிகை நீ கண்ணசைத்தால்
உள்ளமெல்லாம் உவகை
பள்ளமெல்லாம் பாய்ந்தோடும்
கங்கை நதிபோல
கரைபுரண்டு ஓடுதடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான்

முட்களையும் நேசிக்கிறேன்
உங்கள்
சொற்கள் என்னைக் குத்துவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழை

வறுமைக்கு


வாக்கப்பட்ட

வானத்தின் கண்ணீர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல்

நீரும், நெருப்பும்
பேதம் பார்ப்பதில்லை - நம்
காதலைப் போலவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல்..
# நட்பு..
# வாழ்க்கை..

நீயும், நானும்

ஒன்றானால் காதல்

இரண்டானால் நட்பு


மூன்றானால், அது தான் வாழ்க்கை

மன்னார் அமுதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவசாயி பேசுறேங்க..

வருண பகவானே
வந்திறங்கிப் பாருமையா
கருணைக் கண் திறந்து
நாலு துளி தூவுமையா

செந்நெல் விளையலயா காட்டுல
செங்குருதி ஓடுதையா நாட்டுல
பரதேசி ஆகிவிட்டேன் நீரின்றி - பஞ்சம்
பிழைக்கச் செல்கிறேன் நீர்தேடி

வேரோடி முளைவிட்ட பயிரெல்லாம்
நீரோடை தேடி விரல் நீட்டுதையா
சீராட்டிப்இ பாராட்டி வளர்த்த பயிர்
சின்னாத்தா வாழ்க்கபோல சிதஞ்சிருச்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புன்செய் நிலமெல்லாம்
புழுதிக்காடா ஆகிருச்சே
நன்செய் நிலமெல்லாம்
நகர்புறமா மாறிருச்சே

குளத்தடியில் நீரெடுத்த
காலெமெல்லாம் மலையேறி
நிலத்தடியில் குழாய் விட்டு
நீர்தேடி அலைகின்றோம்

வல்லிக்கண்ணு செட்டியாரின்
கடன்சுமையின் பாரத்தால்
தலைக்குமேல இருந்தநாலு
தலைமுடியும் விழுந்திருச்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுதலைப் பள்ளு

சொல்லடி சிவசக்தி
நாம் தமிழரடி - உலகின்
மறவர்குடி - என்று
சொல்லடி சிவசக்தி

எட்டப்பர் களை யெடுத்து
புல்லுருவிகளை யொழித்து
கருங்காலி மரமறுத்து - நமக்கென
நாற்காலி சமைப்போமென்று
(சொல்லடி சிவசக்தி)

விட்ட நிலம் வீழவில்லை - தீ
சுட்ட இடம் ஆறவில்லை - காயம்
பட்ட மனம் மாறிவிட்டால் - உயர்
மட்ட பீடம் மகிழுமென்று
(சொல்லடி சிவசக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விளக்கோடு எரிந்து வீழ
விட்டிலல்ல நாங்கள்
விழுந்த இடம் பொசுக்கிவிடும்
விடிவெள்ளி தமிழனென்று
(சொல்லடி சிவசக்தி)

விதைத்த இனம் முளைத்து வரும்
மீண்டும் உனை சிதைத் தழிக்கும்
சாம்பலாக வீழ்ந்தாலும்
பீனிக்சாய் எழுவோமென்று
(சொல்லடி சிவசக்தி)

விண்முட்ட, முட்டப் பறப்போம்
விடுதலையொன்றையே ரசிப்போம்
விரல்விட்டெண்ணும் நொடிகளுக்குள்
விட்டதை எல்லாம் ஜெயிப்போமென்று
(சொல்லடி சிவசக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏழு நாட்களும்_
# ஒரு காதலும்_

அப்படியென்ன கேட்டுவிட்டேன்
பெரிதாக ?

நீ சிரிக்கையில் ரசித்தும்
அழுகையில் அணைத்தும்

நடக்கையில் விரல்கோர்த்து
வாழவும் தானே கேட்கிறேன்...

விளம்பர எண்களை
விலாசமாக்கிய
முன்பின் தெரியாத
முகம் பார்த்துப் பழகாத - யாரோ
முகமூடிக்கு கொடுக்கும் வாய்ப்பைத்
தானே கேட்கிறேன் - நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சுயத்தையும்
அஞ்சலுறைக்குள் அடைத்து
முகமூடிக்குள் முகத்தைப் புதைத்து
உன் பிம்பம் காணாமலேயே
வீட்டையும் காசையும்
அலைபேசியில் விலைபேசியிருந்தால்
கிடைத்திருப்பாய் போல

அப்படியென்ன கேட்டுவிட்டேன்
பெரிதாக
நீ சிரிக்கையில் ரசித்தும்
அழுகையில் அணைத்தும்

நடக்கையில் விரல்கோர்த்து
வாழவும் தானே கேட்கிறேன்...
ஒரு வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல் காயங்கள்

கருவாக நெஞ்சிலே கொண்டேன் உன்னை
கழுவிலே ஏற்றிக் கொன்றாய் என்னை
முழுநாளும் உன்நினைவாய் உள்ளேன் பெண்ணே
இதையுணர உன் இதயத்திற் கில்லையா கண்ணே

உணர்வலைகள் நீதான் உயிரே என்றேன்
சகலமும் நீதான் சகியே யென்றேன் - என்
சரித்திரம் நீயென உரைத்த பின்னும் - நான்
தரித்திரம் ஆனதன் கதை சொல்லடி

அழைக்கும் முன்பே நான் நாடி வந்தேன் - உன்
வருகை எதிர்பார்த்தே தேடி நின்றேன்
உயிரில் உயிராக உறைந்த பின்னும் - என்
கருவைக் கலைக்க உன் மனமொத்ததோ?

ஆண்மையின் ஸ்பரிசங்கள் புரிதல் கொண்டாய்
பெண்மையின் வாசத்தை விட்டுச் சென்றாய்
விண்ணென்று விண்ணென்று
விண்முட்டிச் செல்கையிலே
விட்டொழித்தேன் உனையென்று வெட்டிச்சென்றாய்



# இரங்கல் கவி - கு.முத்துக்குமரன்

தூத்துக்குடியில் பிறந்தவனே
முத்துக்குமரா
மறக்குடியில் பிறந்தவன் நீ...
முத்தே... குமரா...

முத்தெடுக்கச் சென்னை வந்து
மூழ்கிப் போனவனே..
தமிழனுக்காய் உடலெரித்து
தமிழாய் வாழ்பவனே

முத்து முத்தாய்த் தமிழகத்தில்
முத்துக்கள் முளைப்பதற்கு
முத்தாய்ப்பாய் இருந்தவனே
நீதான்டா முதலெமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இறுதி மடல் படிக்கையிலே
உடலெங்கும் புல்லரிப்பு
மையிற்கு பதிலாக
உணர்ச்சிகளை ஊற்றினையோ

தமிழனுக்காய் உயிர் துறக்க
தமிழ்சாதி இருக்கென்று
கவியெழுதி மாழாத!
செயல்வீரன் நீயன்றோ

கவியெழுதி உடலெரிக்க
ஊக்குவிப்பு தரல மச்சான்
உசுரோடு இருங்க மக்காள்
இருந்தாத் தான் பலமெமக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டு விடுதலை காண் கிளியே



விட்டு விடுதலை காண் கிளியே - கூண்டை
விட்டு விடுதலை காண்.
சுதந்திரக் காற்றில்லா
தமிழனைப் போல நீ
எத்தனை நாள் வாழ்வாய்? கிளியே
எத்தனை நாள் வாழ்வாய்

மெத்தப்படித்த நம் பண்டிதர் சொல்வதை
எத்தனை நாள் கேட்பாய் கிளியே //
உனக்கெனத் தனியிடம்
தமிழுக்கெனப் புதுயுகம்
என்று படைப்பாயோ - கிளியே
என்று படைப்பாயோ

மாற்றுக் கருத்திற்கு
மாலையும் பத்தியும்
ஏற்றி வளர்ப்பதேனோ - கிளியே //
சொந்தங்கள், சாதியப் படைகளை
எழுத்தாணி கொண்டு
சொறிந்து கொள்வதேனோ - கிளியே //


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப் பிள்ளைகள்
விதைத்த பயிர் போல
ஆனதல்லோ இயக்கம் - அறுவடை
ஆகலையே தாயகம்
ஆக்கப் பொறுக்காதோர், ஆப்பசைத்த கதை
ஆண்டாண்டாய் அறிவோமே - கிளியே //

வீரத்தமிழன் சாகலயும்
கேட்பதில்லை உயிரை - பிச்யையாயக்
கேட்பதிலை உயிரை
மானத்தைக் கொன்று, மறவனை விற்று
மாண்டவர் நீங்களன்றோ - உயிரோடு
மாண்டவர் நீங்களன்றோ

அண்ணனும் தம்பியும் அடிபட்டுச் செத்தால்
லாபம் யாருக்கடா? - சிந்தி
அவமானம் யாருக்கடா - சிந்தி
உங்கள் வீரத்தைக் காட்ட
பரதேசத்தைப் போக்க
விலைக்கே விற்று விட்டீர்... - தாயகத்தை
விலைக்கே விற்று விட்டீர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரணிக்க முன் ஒரு நிமிடம்

மரணிக்க முன் ஒரு நிமிடம்
எழுதிவிடுகிறேன்
உங்கள் தீராத
மனப் பக்கங்களில்

ஒவ்வொரு முறை
இதயம் துடித்து
அடங்கும் போதும்
ஓராயிரம் எண்ணக் குமுறல்கள்
இதயத்தின் ஓரத்தில்
உடைப்பெடுத்து
ஆங்காங்கே அடைத்துப்
பின் பெருவலியோடு
மூளையில் மையம் கொள்ளும்

பலருக்குத் தொண்டைக் குழிக்குள்
அடைந்துக் கொண்டவை தான்
எனக்கோ விரல்களின் வழியே
வீழ்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை
எழுதாத இரவுகள்
இனப் படுகொலைகளைப் போலவே
முடிவின்றி நீள்கின்றன

ஒருபுறம்
இனங்களுக்கிடையே போராட்டம்
மறுபுறம்
ஓரினத்திற்குள்ளேயே மாறாட்டம்
எதைத் தொட
எதை விட... தெரியவில்லை

இரவின் நிசப்தத்தைக்
கிழித்துச் செல்லும்
பல்குழல் எறிகணை போல்
ஓங்காரமாய் ஓலமிடும்
இனவெறிகள்

கறைகளோடே
சுத்தம் பற்றிப் போதிக்கும்
நம் சாதீயச்
சவர்க்காரங்கள்
எத்தனைமுறை வெளுத்தாலும்
கரைவதேயில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது
ஜனநாயக நீரோடையில்
ஞானஸ்நானம் பெற்று
சிறுவர்களைக் கடத்திக்
கைகளைக் கட்டி
கழுத்தை அறுக்கும்
பிரிவின் வலியறியா
அரசியல் பெருச்சாலிகளின்
கைக்கூலிகள்

கைக்குக் கையாலும்
வாய்க்கு வாயாலும்
விடை தரும் பண்டிதர்கள்

ஏனொ
எழுத்திற்கு மட்டும்
எழுத்தால் பதில் சொல்வதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது.

– திருக்குறள்

எனது கவிதைகளை தங்கள் இணையதளங்களிலும், மின்னிதழ்களிலும் பிரசுரித்து வாசகர் மத்தியில் பரவலடையச் செய்தமைக்காக அனைத்து இணைய தளங்களுக்கும், மின்னிதழ்களுக்கும், திரட்டிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

<u>இணையதளங்கள் மற்றும் மின்னிதழ்கள்</u>

http://www.adhikaalai.com/
http://youthful.vikatan.com/youth/index.asp
http://www.tamilauthors.com/
http://www.nilacharal.com/
http://www.lankasripoems.com/index.php

<u>திரட்டிகள்</u>

http://www.tamilmanam.net/
http://www.yaaldevi.com/
http://www.pageflakes.com/mayunathan
http://www.thiratti.com/
http://poosaram.blogspot.com/

படங்கள்
நன்றி: இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜோசப் அமுதன் டானியல் எனும் இயற்பெயரைக் கொண்ட மன்னார் அமுதன் அருந்தமிழும், செந்நெல்லும் விளையும் மன்னார் மாநகரின் சின்னக்கடை நகரில் 1984 ஆம் ஆண்டு பிறந்தவர்.

மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகக் கணனி விஞ்ஞானப் பட்டதாரியான இவர் கணனியியலில் பட்டப்பின் டிப்ளோமாவையும் **(P.G.D.C.A)** நிறைவு செய்துள்ளார். இலக்கிய உலகில் தன்னை ஒரு வலைப்பதிவாளனாக அறிமுகப்படுத்திக் கொண்டு வலைப் பதிவாளர்கள் மத்தியில் தனக்கென சிறப்பான ஓரிடத்தினைப் பிடித்துக் கொண்டவர். சிறந்த கவிஞராக மட்டுமின்றி, சிறந்த சதுரங்க வீரராகவும் திகழும் அமுதன், ஸ்திரமான கொள்கைகளைத் தனக்கென வகுத்துக் கொண்டு வாழ்பவர். இளங்கவிஞர் அமுதன் கவிதைத் துறையில் மென்மேலும் சிறக்க மனமார வாழ்த்துகிறேன்.

**எம்.எல்.எம். அன்ஸார்,**
**தலைவர்,**
**சமூக கலைத் தொடர்புகள் நிலையம்,**
**காத்தான்குடி.**



150/=

ISBN-978-955-8715-56-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org